Registered as a Newspaper

பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | சித்திரை 7 | (20.4.94) | புதன்கிழமை | ஓசை 61

## குழந்தையிலிருந்து வயோதிபர்வரை 'செப்டிசீமியா'வால் இறப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களில் 92பேர் ''செப்டிசீமியா'' நோயினால் மரணமடைந்துள்ளதாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளன. இச் செப்டிசீமியா நிலையானது நான்கு மாத குழந்தைகளிலிருந்து எண்பத்தி நான்கு வயது வயோதிபர் வரையில் இம் மூன்று மாதகாலத்தில் ஏற்பட்டுள்ளது. இதனால் இறந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஐந்துவயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(நி. ச)

## எல்லாளன் படையின் எச்சரிக்கை

# உல்லாசப் பயணிகளுக்கு அறிவுறுத்து மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் முடிவு

அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு

## கோகுலனுக்கு இரண்டாவது தடவை தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடாத்திய அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில் குறைந்த வயதில் தோற்றி கூடுதலான புள்ளியைப் பெற்றுக் கொண்ட மாணவன் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். நேற்று இரவு தமிழீழக் கல்விக் கழக நடுவப் பணியகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வின் போதே தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசினை தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. பாலகுமாரன் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய மாணவனான செல்வன் விவேகானந்தன் கோகுலனுக்கு வழங்கினார். இவர் ஆண்டு ஐந்தில் கல்விக் கற்றுக் கொண்டே ஆண்டு ஆறிற்கு நடாத்தப்பட்ட மேற்படி பரீட்சையில் தோற்றி தென்மராட்சிக் கோட்டத்திலேயே முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் கடந்த வருடமும் ஆண்டு நான்கில் கற்ற வேளையில் ஆண்டு ஏழுக்கான பொது அறிவுத் தேர்வில் தோற்றி தலைவரின் சிறப்புப் பரிசினைத் தட்டிக் கொண்டதுடன் இவ்வருடமும் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசினை இரண்டாவது தடவையாக பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விசேட நிகழ்வில் யாழ். கல்வி வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி, தமிழீழ கல்வி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## இன்று மூடப்படும்

இன்று அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களும், மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகமும் விசாரணைப் பகுதிச் செயலகமும் யாழ் - வன்னி தொடர்பு சேவைச் செயலகமும் திறக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு பேச்சு வார்த்தைக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றார்.

## கொழும்பில் தூதுவர்கள் கூடி ஆராய்வு

[கொழும்பு]

கொழும்பில் இருக்கும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் எல்லாளன் படையின் தாக்குதல் எச்சரிக்கை குறித்து தமது நாடுகளில் இருந்து வரும் உல்லாசப்பயணிகளுக்கு அறிவுறுத்தவுள்ளனர். இத்தாலி, பிரிட்டன், ஜேர்மனி உட்பட கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் கொழும்பில் கூடி அவசரமாக ஆராய்ந்த பின்பே இம் முடிவிற்கு வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உல்லாசப் பயணிகளையும், வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் அச்சுறுத்தும் வகையில் எல்லாளன் படை விடுத்த எச்சரிக்கைக்குப் பின்னர் இக் கூட்டம் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்தில் விமான நிறுவனங்கள் மற்றும் பயண முகவர்களுக்கு வழமையாக அனுப்பப்படும் எச்சரிக்கைகளுடன் இவ் எச்சரிக்கையும் சேர்க்கப்படுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கையில், சிறிலங்காவிற்கு வரவேண்டாம் என்று தமது நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு கூறப்போவதில்லை; எனினும் எல்லாளன் படை என தன்னை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உல்லாசப் பயணிகள் பலர் பயணங்கள் ரத்து

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்தும் ''எல்லாளன் படையினர்'' விடுத்த எச்சரிக்கைகளை அடுத்தும் உல்லாசப் பயணிகள் பலர் தமது இலங்கைக்கான விஜயத்தை ரத்துச் செய்துள்ளனர்.

குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து அச்சமடைந்திருந்த உல்லாசப் பயணிகள் தமது பிரயாணப் பட்டியலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி 6ஆம் ஆண்டு நினைவு

# எழுச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய ஆதிக்க சக்திகளுக் கெதிராகவும் அடக்கு முறை வடிவங்களுக்கெதிராகவும் அகிம்சை வழியில் போராடி தியாக மரணமடைந்த தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் நேற்று மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் குடாநாடு உட்பட வட தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நேற்றைய தினம் தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. நேற்றைய அன்னை பூபதி நினைவு நிகழ்வுகளில் பெண்கள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அனைத்து அரச, தனியார் அலுவலகங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள், பொதுமக்களின் வீட்டு வாயில்கள் ஆகியவற்றில் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இப்பந்தல்களில் அணையாத தீபங்கள் ஏற்றியும் மலர்கள் தூவியும், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதை அவதானிக்க முடிந்தது.

இவற்றைவிட யாழ் குடாநாட்டில் நேற்றைய தினம் கோட்ட ரீதியாக அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன. தீவகம், வலிகாமம் மற்றும் மட்டு அம்பாறைத் தொட்டப் பகுதிகளில் ஆகியவற்றிற்கான அஞ்சலிக் கூட்டம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. தென்மராட்சிக் கோட்டத்திற்கான அஞ்சலிக் கூட்டம் மட்டுவில் சமனாசனி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது, வடமராட்சிக் கோட்டத்துக்கான அஞ்சலிக் கூட்டம் அல்வாய் நாவிந்தி பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்றது.

மேற்படி கூட்டங்களில் பலர் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். அதைத் தொடர்ந்து பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (க)

### அன்னை பூபதி பொது அறிவு தேர்வு

## சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவருக்குப் பரிசு

(நமது நிருபர்)

தற்கொடையாளி அன்னை பூபதி நினைவாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் தேசிய கோட்ட ரீதியில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தேசிய ரீதியில் ஏழு மாவட்டங்களிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற 21 மாணவர்கள் தங்கப்பதக்கமும் மற்றும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதனை அடுத்து கோட்ட ரீதியாக முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. இவர்களுக்கான பரிசில்களை செல்வி தி பெரியதம்பி, இ. சிவானந்தன், திரு. ஆர். எஸ். நடராசா, பேராசிரியர் அ. சண்முகதாஸ், அருட்திரு பிரான்சிஸ் யோசேப் அடிகளார், செல்வி ரதி ஆகியோர் வழங்கினர்.

பரிசில்களை நேரில் பெறத்தவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு பனிச்சங்கேணியில்

## ராணுவம் வெறியாட்டம்

## 15 வீடுகள் தீக்கிரை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பனிச்சங்கேணி என்னும் இடத்தில் சிறிலங்காப் படையினர் தமிழர்களின் பதினைந்துக்கும் அதிகமான வீடுகளுக்கு தீவைத்துக் கொளுத்தியுள்ளனர்.

அத்துடன் தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழ் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டும் மற்றும் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

விடுதலைப் புலிகள் இப்பகுதியில் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் எட்டு மாகாணமா; ஒன்பது மாகாணமா உள்ளன?

### பாராளுமன்றத்தில் சுவையான விவாதம்

(கொழும்பு)

இலங்கைத் தீவில் இருப்பது எட்டு மாகாணங்களா அல்லது ஒன்பது மாகாணங்களா என்பது பற்றி நேற்றுக் கொழும்பு பாராளுமன்றத்தில் சுவையான விவாதம் இடம் பெற்றது.

பிரதி சபாநாயகர் காமினி [illegible] தலைமையில் பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது சமத் தொழில் ஆராய்ச்சி சபைகளை தேசிய ஆராய்ச்சி சபை எனப் பெயர் மாற்றுவது பற்றிய மசோதா விவசாய அமைச்சர் தர்மதாச பண்டாவினால் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவில் குறிப்பிடும் நிறுவனங்கள் மாகாண வாரியாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருக்கும் நிறுவனங்கள் தனியாகவே பிரிக்கப்பட்டிருந்தன.

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாச பண்டா சட்ட மூலத்தை சமர்ப்பித்து உரையாற்றியபோது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வை. கோ. அணியின் முக்கிய பிரமுகர்

# சென்னை நகரில் படுகொலை

### தி. மு. க. முன்னாள் எம். எல். ஏ கைது

(சென்னை)

தி. மு. கவிலிருந்து பிரிந்து இயங்கும் வை. கோபாலசாமியின் நெருங்கிய சகாவான ஏழுமலை என்பவர் சென்னை ராயபுரம் பகுதியிலுள்ள அவரது இல்லத்திற்கு சமீபமாக வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சைக்கிள் கடை ஒன்றுக்கு அருகில் இவர் நின்று கொண்டிருந்த போது ஏறத்தாழ இருபது பேர் அடங்கிய கும்பல் ஒன்றினால் வெட்டப்பட்டு இவர் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் நடைபெற்ற பேரணியை ஒழுங்கு செய்த முக்கிய பிரமுகர்களில் ஏழுமலை குறிப்பிடத்தக்கவராவார்.

ஏழுமலை படுகொலையுண்ட செய்தி கிடைத்ததும் புதுடில்லிக்கு மாநிலங்களை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த வை. கோபாலசாமி உடனடியாக சென்னை திரும்பி இறுதி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஏழுமலைக்கு அஞ்சலி செலுத்தினார். அத்துடன் மூன்று தினங்களுக்கு தமது கட்சி துக்கதினம் கடைப்பிடிக்கும் என்றும் அறிவித்தார்.

இதேவேளை ஏழுமலை கொலை செய்யப்பட்டதன் பின்னணியில் மு. கருணாநிதி தலைமையிலான தி. மு. க இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

தி. மு. கவைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கும்பலொன்று சந்திகள் சகிதம் தாக்குதல் நடத்தியதாகவும், இச்சம்பவம் நடந்த இடத்திற்கு அருகாமையில் அ. இ. அ. தி. மு. கவின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன மீனவர்

## சடலமாக மீட்பு

(குருநகர்)

கடந்த ஞாயிறு இரவு பூநகரி-கல்முனைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது நடத்திய தாக்குதலில் குண்டுக் காயங்களுடன் கடலில் குதித்துக் காணாமல் போன குருநகர் மீனவஇளைஞனின் சடலம் நேற்று அதிகாலை ஒரு கரைப் பகுதியில் கரை ஒதுங்கியதைக் கண்டு உறவினர்கள் மீட்டு வந்தனர்.

குருநகர் தண்ணீர்த்தாங்கி 1-ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஜேசோன் மரியதாஸ் (சுபட்சிறில் - வயது 17) என்னும் மீனவஇளைஞனின் உடலில் 14 குண்டுக் காயங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆங்கில மருத்துவம்**

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை, மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது; பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9016)

## கவிபர் தாக்குதல்

(குருநகர்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ராணுவத்தினர் நேற்று முன்தினம் நண்பகல் 12-30 மணியில் இருந்து 12-45 மணி வரை கவிபர் தாக்குதலை தொடர்ச்சியாக நடத்தினர்;

அதன்பின்பு 12-50 மணியளவில் எறிகணைத் தாக்குதலை நடத்தினர்;

யாழ். கரையோரப் பகுதியை நோக்கி நடாத்தப்பட்ட தாக்குதலில் எவரும் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது; (21)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய அதிரடிப்படை முகாம்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பில் படுவான் கரையின் பல பகுதிகளில் விசேட அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது; மேலும் உடனடியாகவே மட்டக்களப்பு நகரில் விசேட அதிரடிப்படை முகாம் அமைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது;

இதேவேளை அம்பாறை தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் விசேட அதிரடிப்படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டு இப்பகுதிகளுக்கு பொலிசாரை அனுப்ப ஏற்பாடுகள் துரிதமாக செய்யப்பட்டு வருவதாக படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்;

இதன் ஆரம்ப நடவடிக்கையாக அம்பாறையில் சில அதிரடிப்படை முகாம்கள் மூடப்படவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, பெரிய நீலாவணை ஆகிய பகுதிகளில் உள்ள அதிரடிப்படை முகாம்கள் முதற்கட்டமாக மூடப்பட்டு மட்டக்களப்பு நகரில் திறக்கப்படுகிறது, அம்பாறையின் காரைதீவு, திருக்கோவில் அதிரடிப்படை முகாம்கள் தொடர்ந்து இயங்கும், காரைதீவு அதிரடிப்படை முகாம் இப்பிரதேசத்தின் தலைமைச் செயலகமாகும்.

அம்பாறை மாவட்டத்திற்கு கடந்தவாரம் அதிரடிப்படை கமாண்டர் லயனல் கருணாதிலக விஜயம்செய்திருந்தார். அவர் அங்குள்ள படைமுகாம்களில் பாதுகாப்பு நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றிருந்தார்.

## வெளிநாடு பயணம்

(கொழும்பு)

மேல் மாகாணசபை முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்க நேற்று வெளிநாட்டுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்;

## தெமட்டகொடையில் இரு வெடிகுண்டுகள் மீட்பு

### வீட்டில் இருந்த இளைஞனும் கைது

(கொழும்பு)

தெமட்டகொடப் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து கடந்த 11ஆம்திகதி இரு குண்டுகளும் அதை வெடிக்க வைக்கும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக வீட்டு உரிமையாளரின் மகன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்; வீட்டுஉரிமையாளர் தமிழரசனார் அரைதுமணைவி சிங்களப் பெண்மணி ஆவார்;

கைதான இவர்களது மகன் தமிழ் அமைப்பொன்றின் சார் எனப்படும் உறுப்பினருடன் நெருங்கிய தொடர்புடையவர் எனவும் இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர் ஒருவருடனும் இவருக்கு தொடர்பு இருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்ததாக பொலிசார் கூறினர்.

---

## சேவைக்கால கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நல்லூர், மற்றும் வேலணை, ஊர்காவற்துறை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், சைவசமயம், வர்த்தகம், விவசாயம், உடற்பயிற்சி ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கும், செயலமர்வும் இன்று முதல் நடைபெறவுள்ளது; யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான அமர்வுகள் வேம்படி மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி என்பவற்றிலும் வேலணை, ஊர்காவற்துறைகோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான அமர்வுகள் சென். ஜோன்ஸ் அக்கடமியிலும் நடைபெறவுள்ளது.

## பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் நகரப்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு நேற்று முதல் நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது;

இன்றைய நிகழ்ச்சிகளில் டாக்டர் ஆர். சிவசங்கர் கல...

---

### வட இலங்கை சங்கீத சபை
## எழுதுவினைஞர் வெற்றிடம்

**அடிப்படைத் தகைமைகள்:**

| | |
|---|---|
| கல்வி : | குறைந்த பட்சம் க.பொ.த (சா/த) சித்தியடைந்திருத்தல் (சங்கீதம், ஆங்கிலம், தமிழ்த் தட்டச்சு என்பவற்றில் மேலதிக தகைமை விரும்பத்தக்கது) |
| வயது : | 40இற்கும் 50இற்கும் இடையில் |
| பிணைப் பணம்: | ரூபாய் 5000/- செலுத்த வேண்டும்; |

நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு இடம்பெறும். சம்பளம் மாதம் ரூ.1000/-. சபைஅலுவலகத்திலிருந்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று விண்ணப்பதாரி தனது சொந்தக் கையெழுத்தினால் நிரப்பி பதிவுத் தபாலில் 1994 மே 02இன் முன் தலைவர், வ. இ. ச. சபை, கல்வித் திணைக்களம், நல்லூர்; யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பவும்;

கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.
1994-04-18

தலைவர்-வ.இ.ச.ச.
கல்விப் பணிப்பாளர்.
(சி-9198)

---

### வலி கிழக்கு வடபகுதி
### ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி
## அன்னை பூபதி அவர்களின்
### 6-ம் ஆண்டு அடையாள உண்ணா நோன்பு

18-4-94 திங்கள் (புத்தூர் தலைமைக் காரியாலய முன்றல்)

தலைவர்: திரு. க. பேரின்பநாயகம் அவர்கள் காலை 7.30 மணியளவில் தேசிய கொடியேற்றல் வைபவத்துடன் ஆரம்பமானது. தேசிய கொடியினை ...

---

தீவக உற்பத்திக் குழு ஆதரவுடன் வேலணை தெங்கு பனம்பொருள் உ. வி. கூ. சங்கத்தால் நடாத்தப்படும்

## மேதின உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகள் தீவகக்கோட்டம் 1994

இடம்: சாம்சன் குடியிருப்பு
கண்டிவீதி அரியாலை

### போட்டி விபரங்கள்

20. 4. 94 புதன்கிழமை நேரம் பி. ப 2.00மணி

1. கிடுகுபின்னுதல் (ஆண்கள் -பெண்கள்)
2. குட்டான் இழைத்தல் (ஆண்கள்-பெண்கள்)

21. 4. 94 வியாழக்கிழமை
நேரம்; காலை 10- 00 மணி
பனைமரம் ஏறுதல் போட்டி (ஆண்கள்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

❋ உழைக்கும் தொழிலாளரே ஒன்றுபடுவீர் !
❋ காண்போம் தமிழீழம் ❋

பொது முகாமையாளர்
வேலணை தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கம்
19-04-1994 யாழ்ப்பாணம்; (8095)

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## வீதி வேலை பொருட்களுக்கான கூறு விலை அறிவித்தல் - 1994

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு வீதி வேலை பொருட்களுக்கான:

1. 2'', 3/4'' இரசர் சல்லி (கையால் உடைத்தது)
2. ஊரி மண்
3. உமி

ஆகியவற்றிற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன;

கூறுவிலை யாழ். மாநகராட்சி மன்ற மாநகரத்துப் பொறியியலாளரிடமிருந்து 26-04-94-ம் திகதி செவ்...

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
25-01-1932

உதிர்வு:
29-04-1993

திதி:
20 04 1994

## அமரர் வீரகத்தி முத்துலிங்கம்

(சாவகச்சேரியின் நீண்டகால வர்த்தகரும், லிங்கம்ஸ் உரிமையாளரும்)

நந்தவனத்தில் ஒரு நறுமண மலரே
தாரகைகள் நடுவே நின்றிலங்கும் தண்மதியே
அறிவு பல புகட்டி எமக்கு ஆசானாக இருந்தீர்கள்
அன்பினாலே குழைத்தெடுத்து எமை ஆளாக்கிவிட்டீர்கள்
அப்பா அப்பா என அரற்றலைத்தே அரைநொடியில்
எப்பாதை பார்த்து நீங்கள் எமைவிட்டுச் சென்றீர்கள்
வெந்து நாம் துடிதுடிக்க வெகுதூரம் சென்றீர்களோ?
ஈராறு திங்கள் உங்களைக் காணாத போதும் இங்கே
எமக்கு நல்வழி காட்டி நீங்கள் நம்முடனே வாழ்கின்றீர்கள்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(8098)

மனைவி,
பிள்ளைகள்

---

## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-20

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்- பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் ...

ஆரம்பமாகியுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகளில் டாக்டர் ஆர். சிவசங்கர் கலந்து கொள்ளவுள்ளார். நாளை வியாழக்கிழமை வரை நீடிக்கும் இப் பயிற்சிக் கருத்தரங்கில் சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அடையாள உண்ணாவிரதம்

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக அகிம்சைப் போர் தொடுத்து தியாக மரணமடைந்த அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முகாமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 8 30 மணிக்கு மலர் அஞ்சலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் நினைவுரைகளுடன் கவியரங்கு, கலைநிகழ்வுகள், 'இது எங்கள் தேசம்' ஒளிப்படக்காட்சி என்பன இடம்பெற்றதுடன் பிற்பகல் 4.30 மணிக்கு பழரசம் வழங்கலுடன் நிறைவுற்றது.

இவ்வடையாள உண்ணாவிரதத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணியாளர்களும் போராளிகளும் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.

## சிரமதானம்

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக அகிம்சைப் போரில் தியாக மரணமடைந்த அன்னைபூபதி நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் சந்திரூபன் அறிவுச்சோலையிலும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

---

தலைவர்: திரு. க. பேரின்பநாயகம் அவர்கள் காலை 7.30 மணியளவில் தேசிய கொடியேற்றல் வைபவத்துடன் ஆரம்பமானது. தேசிய கொடியினை புத்தூர் கிராமிய பொறுப்பாளர் அவர்கள் ஏற்றி வைத்தார்.

மௌன அஞ்சலியினைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும், கவிதை நிகழ்ச்சிகளும் 10-00 மணிவரை இடம் பெற்றன, அதனைத் தொடர்ந்து எமது பூநேரூ கூ சமீக இசைக் கலைஞர்களின் எழுச்சிப் பாடல்கள் இசை நிகழ்ச்சியும் தொடர்ந்து கவிதை உரை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று சரியாக 5-30 மணிக்கு நீராகாரம் வழங்கி முடித்து வைக்கப்பட்டது.

(8097)

---

# யாழ்ப்பாண மாநகரசபை

## கூறு விலை

கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் யாழ்ப்பாண மாநகரசபைக்கு தேவைப்படுவதனால் அவற்றை விநியோகிக்கக் கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக்கூறு விலைகள் 27-04-94-ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்கப்படல் வேண்டும். இது விடயமாக மேலும் தகவல் அறிய விரும்பின் அலுவலக நேரத்தில் மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும். பொருட்களின் விபரம் வருமாறு:

1. கழிவு அகற்றும் பம் (Sludge Pump) ஒன்று, 3 குதிரை வலு இயந்திரத்தால் இயக்கக்கூடிய 3'' விட்ட உள்வாங்கல் வெளிச்செலுத்தல் அளவுடையதும் அதற்குரிய அடிவால்வும் (Foot Valve) உடையதாக இருத்தல் வேண்டும். கூறுவிலை சமர்ப்பிப்போர் சகலதொழில் நுட்ப பிரமாணங்களையும் குறிப்பிடல் வேண்டும்.
2. தரமான தியோடலைற் ஒன்று (Theodalite)
3. தரமான மட்டக்கருவி ஒன்று (Level Instrument)
4. பாவனையிலுள்ள நல்ல நிலையிலுள்ள டிராக்டர் பெட்டியுடன் ஒன்றின் விலை.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-04-94.

(சி-9202)

---

தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கூறுவிலை யாழ். மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 26-04-94-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி வரை ரூபா 500/- மீளளிக்கப்படும் பிணைப்பணமாகவும், ரூபா 50/- கேள்விப்படிவக் கட்டணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் (இணைப்பிரதியில்) சமர்ப்பித்தல் வேண்டும். கூறு விலை யாவும் 27-04-94-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூறு விலை சமர்ப்பிக்கும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு ''மராமத்துப் பகுதி வீதிவேலைப் பொருட்களுக்கான கூறுவிலை -1994'' எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் அவசியம்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்/மாநகரசபை மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-04-94

(சி-9201)

---

# அறிவித்தல்

## நீர்வேலி கந்தசாமி கோயில்

பதிவு இல: HA/JA/5/84

இவ்விளம்பரம் வெளியிடப்படும் திகதிவரை குறித்த நீர்வேலி கந்தசாமி கோயிலுக்காக பரிபாலன சபையிடமோ அல்லது ஆலயத்துடன் தொடர்புடைய நபர்களிடமோ நன்கொடை செய்யப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்களை பரிபாலன சபைப் பொருளாளருக்கு அல்லது செயலாளருக்கு 30-04-1994 க்குமுன் தகவல் தந்து உறுதிசெய்யுமாறும் அதன் பெறுமதியை அளவீடுசெய்ய ஒத்துழைப்பு வழங்குமாறும் இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகிறது.

குறிப்பு: ஆலயத்துக்காக நன்கொடை வழங்கப்பட்டுள்ள அசையா ஆதனங்களின் பயன்களை பிழையான முறையில் பயன்படுத்தி வருவோர்கள் பற்றியும் பிழையான வழியில் பயன்படுத்தும் ஆதனங்களின் விபரங்கள் பற்றியும் அறியத்தரவும்.

மேற்கூறிய விடயங்கள் சார்பாக 30-04-94 க்கு முன் பரிபாலன சபைக்குத் தகவல் கொடுக்கத் தவறின் தகவல் கொடுக்கத்தவறிய விடயங்களுக்கும், விடயப் பொருட்களுக்கும் குறித்த இச்சபை எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளமாட்டாதென்பதை வெளிப்படுத்திக்கொள்கிறோம்.

நீர்வேலி — சி. தவநாதன்
(8096) 9-4-94 — செயலாளர், பரிபாலனசபை.

---

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்- பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப்-ஜெயன்-ரமணன்** (இராசசேகரம் பிரேமச்சந்திரன் - ஊறணி, வல்வெட்டித்துறை - யாழ்)

**லெப். கந்தன்-ரவி** (அருட்பிரகாசம் எட்மன் சத்தியசீலன் - தேவமாதா கோவிலடி - தும்பளை)

1988ஆம் ஆண்டு யாழ் - தொண்டமானாறு-செருடாவில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ரகீம்** (வெள்ளந்தஐயர் செல்வராசா, - செல்வச்சந்நிதி கோயிலடி:தொண்டமானாறு)

1989ஆம் ஆண்டு மணலாற்றில் கிணறு வெட்டும் பணியின்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த-

**கிளவஸ்நிக்கோ** (கதிரமலை காந்தன் - கல்லுண்டாமட்டு)

யாழ் கழியுரத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**லெப். இன்பம்** (இராசையா ஜெகசீலகிருஷ்ணன் இன்பம்வீதி, வண்ணார்பண்ணை - யாழ்)

இதே சம்பவத்தில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கபில்** (வேலும்மயிலும் சிவகுமார் - சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை - யாழ்)

**நெல்சன்** (பரிணபாலர நோபேட் ஜோர்ஜ்-9-ம் வட்டாரம், நெடுந்தீவு - யாழ்)

1991ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**திலக்** (அழகையா ஜெயபாலு-வந்தாறுமூலை-மட்டு)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**யூசி** (பங்குராசன் பீற்றர் - செம்மண்தீவு, முருங்கன் மன்னார்)

1992ஆம் ஆண்டு மட்டு - சுங்கன்கேணிப்பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவல்துறையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போதுவீரச்சாவெய்திய-

**2-ம் லெப். ஜெகதாஸ்** (நவரத்தினம்சுந்தரராஜன் தம்பிலுவில் -01- அம்பாறை)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடற்படையினரின் வெறியாட்டத்தில் கொல்லப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த 02 பொதுமகன்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9197)

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

# 6ஆம் ஆண்டு நினைவு



தாயின் மடியில்
21-11-1965

அந்நியர் அழிப்பில்
20-04-1988

## கப்டன் ரகீம்

(சி. செல்வராஜன்)
(செல்வச்சந்நிதி கோவிலடி தொண்டமானாறு)

அந்நியரின் ஆக்கிரமிப்பிலிருந்து தாயக மண்ணாம் தமிழீழமதனை மீட்டெடுக்கவென வீறு கொண்டெழுந்த வீரவேங்கை வீர மறவா ரகீமே! — நீ விட்டுச் சென்ற பாதையில் தொடர்வோம் உன் எண்ணம் ஈடேறும் நாள் தொலைவிலில்லை!

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

செல்வச்சந்நிதி
கோவிலடி,
தொண்டமானாறு (8089)

சகோதரர், சகோதரிகள்;
நண்பர்கள், மற்றும் உற்றார்,
உறவினர்கள்.

## தீமூட்டி தற்கொலை

(பருத்தித்துறை)

வாழ்க்கையில் விரக்தியடைந்த இளம் குடும்பப்பெண்ணான மூன்று பிள்ளைகளின் தாயொருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்துத் தற்கொலை செய்துகொண்டார். மனைவியைக் காப்பாற்றச் சென்ற கணவர் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த செல்லத்துரை சிவசோதி (வயது 34) என்பவரே நெருப்புப் பற்றிப் பலியானவராவார். இவரைக் காப்பாற்றச் சென்ற இவரது கணவன் செல்லத்துரை என்பவரே தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளவராவார். இவரது மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (25)

## போட்டிப் பரீட்சை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடாத்தப்படும் புத்தகப் பதிவாளர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் சனிக்கிழமையன்று காலை பத்துமணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

# படையால் கைதான பின்பே இளைஞர் காணமற் போனார்

## ஆட்கொணர்வு மனுவில் நீதிமன்று தீர்ப்பு

(கொழும்பு)

இராணுவத்தினரால் கைதாகி 27-10-90 முதல் இருப்பிடம் தெரியாமல் இருக்கும் மகனை மன்றில் ஆஜர் செய்து விடுதலை செய்யுமாறு தாய் தொடர்ந்த ஆட்கொணர்வு மனு வழக்கில் மனுதாரர் கோரிய நிர்மலராஜா செல்லத்துரை இராணுவத்தினரால் கைதான பின்னரே காணாமற் போயிருக்கின்றார் என கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி தீர்ப்புக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு பெரிய கல்லாறைச் சேர்ந்த நேசம்மா தனது மகன் நிர்மலராஜா செல்லத்துரையின் விடுதலை வேண்டி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனித உரிமை நிறுவன சட்டத்தரணி ஒருவருடாக மனு தாக்கல் செய்தார். தமது கணவர் செல்லத்துரை காலமாகி விட்டதாகவும், தமக்கு 7 பிள்ளைகள் இருப்பதாகவும் மனுவில் கோரப்பட்ட நிர்மலராஜா (22) கடைசிப் பிள்ளை எனவும் 27-10-90 கொழும்பு செல்வதற்காக கடைசி மகனுடன் இ. போ. ச. பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தபோது மல்வத்தை இராணுவ சோதனை நிலையத்தில் வைத்து மகனை இராணுவத்தினர் தடுத்துவைத்ததாகவும் மாலைவரை காத்திருந்தும் மகன் விடுதலை செய்யப்படவில்லை. நடந்ததை மூத்த மகனிடம் கூறுவதற்காக கொழும்பு சென்றேன். 5 தினங்களாகியும் ஒரு முடிவும் தெரியவில்லை கல்லாறு திரும்பும் வழியில் மீண்டும் மல்வத்தை இராணுவ முகாம் சென்று கைதான மகன் குறித்து விசாரித்தேன். விசாரணையின் பின் விடுவிக்கப்படுவார் என்று கூறிய இராணுவ அதிகாரியோ மகன் முகாமில் இல்லை என்றும் எங்குள்ளார் எனத் தெரியவில்லை என்றும் கூறினார்.

27-10-90 முதல் எனது மகன் காணாமற் போய்விட்டார் செய்தி அறிந்த எனது கணவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இறுதி காலத்தில் அவரும் காலமாகிவிட்டார். இது தொடர்பாக 12-11-90 இல் மட்டுநகர் பொலிஸ், கொழும்பு சி. ஐ. டி., காணாமற் போனவர் தொடர்பான ஜனாதிபதி விசாரணைக் குழு ஜனாதிபதி, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியோருக்கு முறைப்பாடு செய்தேன். அரசியலமைப்பின்படி 13 (1) 13 (2) விதிகள் மீறப்பட்டிருப்பதால் எனது மகனை மன்றில் ஆஜர் செய்து விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும்.

இந்த மனுவில் மல்வத்தை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, இராணுவத்தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், சட்ட மா அதிபர் ஆகியோரை மனுதாரர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டிருந்தார்.

இவற்றை மறுத்துரைக்க பொறுப்பதிகாரியோ இராணுவத்தளபதியோ மன்றிற்கு சமுகமளிக்கவில்லை. எனவே அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படி மனுவில் கோரப்பட்டவர் இராணுவ சோதனை நிலையத்தில் கைதான பின்னரே காணாமற் போயுள்ளார் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

நிர்மலராஜா செல்லத்துரை என்ற நபர் காணாமற் போனதற்கு பொறுப்பதிகாரி என்ற முறையில் முதல் பிரதிவாதி காரணமாகிறார். உயர் அதிகாரி என்ற வகையில் முதல் பிரதிவாதியின் நடவடிக்கைக்கு இரண்டாம் பிரதிவாதியும் பொறுப்பாளி ஆகிறார். நீதிபதி தமது தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



# வவுனியா மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையினால் நெல் விளைச்சலில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ விஸ்தரிப்பினால் வவுனியா மாவட்டத்தில் நெல் விளைச்சல் பெரியளவில் பாதிப்படைந்துள்ளது

சிறிலங்கா இராணுவம் பயிர்ச்செய்கை காணிகளில் முகாம்கள் அமைத்தும், அதை அண்டிய இடங்களை நோக்கி தாக்குதலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதால் நெல் விளைச்சல் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

பல பெரிய குளங்கள் உட்பட ஏராளமான குளங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

1990 நடுப்பகுதியில் ஏற்பட்ட இரண்டாம்கட்ட ஈழப் போரை அடுத்து இராணுவ விஸ்தரிப்பு வவுனியா மாவட்டத்தில் வேகமாக இடம் பெற்றுவருகிறது

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படவில்லை.

பொதுமக்களின் இடம்பெயர்வினால் பல கிராமங்கள் மனித நடமாட்டமின்றி பற்றைக்காடுகளாக உருமாறியுள்ளன.

இந்தப்பகுதியில் கால்நடை வளர்ப்பும் பாதிப்படைந்துள்ளது இராணுவ அச்சுறுத்தலால் இடம்பெயர்ந்த பொது மக்கள் அகதிமுகாம்களிலும், உறவினர்-நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இராணுவ விஸ்தரிப்பினால் பயிர்ச்செய்கை பாதிப்படைந்ததுடன் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் கீழ்நிலையை நோக்கி இறங்கிவருவதாகவும் அறியப்படுகிறது. (தி)

## இன்றைய நிகழ்வுகள்

தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்களுக்கான இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் யாழ். வட்டு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி இ. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம் வலயம் (II) இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலா

# அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நீங்கா நினைவு



மண்ணுலகம்:
27-05-1925

விண்ணுலகம்:
01-05-1993

அமரர் சிவகுரு பொன்னம்பலம்
(Retd Railway Head Guard)
திதி: 20-04-1994

எம் உயிரே 'எங்கள் ஐயாவே!

# மன்னார் வைத்தியசாலை உணவில் நஞ்சு கலப்பு

(மன்னார்)

மன்னார் அரசினர் வைத்தியசாலையில் மதிய உணவில் நச்சுத்தன்மை காணப்பட்ட

கைது செய்யப்பட்டு அவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.



## செல்வி சின்னத்துரை வசந்தி

மலர்வு: 1964. 08. 01 — உதிர்வு: 1991. 04. 22

திதி: 1994. 04. 20

பெற்றவரை சோதரரை அன்புடனே அழைத்திடுவாய்
தேடிவந்தோர் அனைவரையும் அரவணைத்து பேசிடுவாய்
காத்திருந்து சாத்திரமாய் யோசனைகள் கூறிடுவாய்
குடும்பநிலை ஓங்கிடவே ஓயாமல் உழைத்துவந்தாய்
கொடியநோய் உனை அணைக்க தீயுடனே சங்கமித்தாய்
மூன்றாண்டு சென்றதம்மா உன் நினைவோ மறவில்லை
வசந்தியுன் பண்புதனை எண்ணி யெண்ணி
சிந்துகின்ற கண்ணீரில் மிதக்கின்றோம் நாமிங்கே.

இவரின் பிரிவால் துயருறும்

'தெய்வலஷ்சுமி வாசா' ஐயா. அம்மா,
அளவாய் தெற்கு, சகோதரிகள்;
அளவாய். (8077)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
6.11.1917

உதிர்வு
21.4.1993

### கயிலாயபிள்ளை நவரத்தினம்

ஆசிரியர்

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்

குருந்தடிப்பிள்ளையார் கோவிலடி,
சுதுமலை
மானிப்பாய்;

அன்புமகன், மனைவி
உற்றார், உறவினர்.
(8078)

(Keld Railway Head ...)

திதி: 20-04-1994

எம் உயிரே எங்கள் ஐயாவே!
எம் வாழ்வின் அணையாச் சுடர் விளக்கே!
ஆலமரமாய் எம் அனைவருக்கும் நிழல் தந்தீர்.
இன்னும் சிலகாலம் வாழ்ந்திருக்க விடாது,
காலன் கைப்பட்டு கணப்பொழுதில் மறைந்து விட்டீர்கள்;

ஆண்டு ஒன்று மறைந்தாலும் - ஐயா
உங்கள் பாச நினைவு எங்கள் நெஞ்சங்களில்
என்றென்றும் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,

''ராஜீபவன்'' மனைவி, மக்கள், மருமக்கள்,
அம்பர்மலை, பேரப்பிள்ளைகள்,
வல்வெட்டித்துறை. (8059)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் (20-04-94)



தோற்றம்:
10 - 02 - 1918

மறைவு
21 - 03 - 1994

திருமதி

### நாகம்மா (நாகரத்தினம்) கதிர்காமசாமி

குடும்ப குலவிளக்கே கோதையரில் திருவிளக்கே
பாசத்தின் பைங்கொடியே பறந்து போனாயோ
அன்பின் இருப்பிடமே பண்பின் உறைவிடமே
என்றும் உன் நினைவே எமையெல்லாம் பார்ப்பதெப்போ

'சீதா வாசம்' கணவன், பிள்ளைகள்,
சங்கானை கிழக்கு, பேரப்பிள்ளைகள்,
சங்கானை; (8069) பூட்டப்பிள்ளைகள்;

யாழ்ப்பாணம் வலயம் (II) இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. வேலாயுதம் பிரதம விருந்தினராகவும் சங்கானை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ப. விக்கினேஸ்வரன், சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. மதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தில் இன்று புதன் கிழமை புதிய நெறிஞானர்க்கான வரவேற்பு விழாவும் பழைய நெறியாளரிற்கான பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளன; (88)

...வைத்தியசாலையில் மதிய உணவில் நச்சுத்தன்மை காணப்பட்டதால் அவ்வுணவை உட்கொண்ட பல நோயாளர்களும், ஆஸ்பத்திரி ஊழியர்களும் வயிற்று நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்ட மேற்படி பால் உணவிலே நச்சுத்தன்மை காணப்பட்டதாக வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டு வரும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது இதனைத் தொடர்ந்து மேற்படி உணவு பரிசோதனைக்காக இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது;

இதேவேளை இது தொடர்பாக மூன்று சமையல்காரர் ...

...ப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது;

### கடும் மழை

(குருநகர்)

வலிகாமம்மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலையில் கடுத்த மழை பெய்தது. முற்பகல் 10 மணிவரை பலதடவை விட்டு விட்டு மழை பெய்ததன் காரணமாக மானிப்பாய், சண்டிலிப்பாய் சங்கானை. அளவெட்டி. பண்டத்தரிப்பு பகுதிகளில் வெள்ளம் பாய்ந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. (21)

# யாழ். மாவட்ட வைத்தியசாலைகள் தரமுயர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்திய சாலைகள் பலவற்றை தரமுயர்த்துவதற்கு மாகாணசபையின் சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது;

இந்த மாவட்டத்திலுள்ள சிறியதும் பெரியதுமான பல வைத்திய சாலைகள் விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது;

யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்திய சாலைகளின் தேவைகள் ஆராயப்படுகின்றன;

சுகாதார மாகாணப் பணிப்பாளரால் பிரதேச ரீதியாக உள்ள வைத்திய சாலைகள் பார்வையிடப்படுகின்றன.

மத்திய மருந்தகம், கிராமிய வைத்திய சாலைகள், சுற்றயல் கூறு, மாவட்ட வைத்திய சாலை, ஆதார வைத்தியசாலை ஆகியவை அனைத்தும் பார்வையிடப்பட்டு, இவற்றை தரமுயர்த்துவது பற்றிய தெரிவும் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது;

பொதுமக்கள். மற்றும் நோயாளர், நோய்களின் தாக்கம் போன்றவையும் கணக்கெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது;

இவற்றை வைத்து தரமுயர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறப்பட்டது;

வைத்திய சாலைகள் தரமுயர்த்தப்படுவதனால் நோயாளிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் சூழல் பாதிப்பு தடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது; (தி)

பொலநறுவையில் பொலிசாரிடமிருந்து

## காணாமற்போன ரி-56 இராணுவத்திடமிருந்து மீட்பு

(கொழும்பு)

பொலநறுவை பொலிஸ் நிலையத்திலிருந்து காணாமற்போன ரி-56 துப்பாக்கி கொத்மலை இராணுவ முகாம் சிப்பாயிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது; இவரும் இவருக்கு உடந்தையாக இருந்தவர் எனக் கூறப்படும் பொதுமகன் ஒருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

சந்தேக நபர் விடுமுறையில் தனது ஊரில் வந்து நின்றபோது பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரின் துப்பாக்கியை திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது;

# மதுராவின் மதுரகானம்

## மதுரா ஆதரவாளர்களின் பரிசுத்திட்ட குலுக்கலும், அதனை சிறப்பிக்கும் வகையிலான கலை நிகழ்வுகளும்

இடம்: இளங்கலைஞர் மன்றம்

காலம்: 20-04-1994 மாலை 4.30 மணிக்கு

நிகழ்ச்சி நிரல்

மாலை 4.30 - 6.30 :- மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| *N. K.* பத்மநாதன் | *K. R.* புண்ணியமூர்த்தி |
| *V. K.* பஞ்சமூர்த்தி | *T.* உதயசங்கர் |
| *R. K.* கேதீஸ்வரன் | *S.* சிவகுமார் |
| *A.* மகேந்திரன் | *P.* முருகானந்தம் |
| | *R.* ஜசோதரன் |

6.30 :- மங்கள விளக்கேற்றல்

திரு. செ. சம்பந்தநாதன்
முகாமையாளர் - இலங்கைவங்கி

திரு ப. இராஜீவன்
பிரதி முகாமையாளர் - இலங்கை வர்த்தக வங்கி

:- தமிழ்த்தாய் வாழ்த்து
இன்னிசைவேந்தர் பொன். சுந்தரலிங்கம்
(தலைவர் இளங்கலைஞர் மன்றம்)

ஆசியுரை
சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)

தலைவர்:- திரு. க. சோமசேகரம்
(பிரபல வர்த்தகர் மகாராணி ரெக்ஸ்ரைஸ்ஸ்)

பிரதம விருந்தினர்:- திரு. ரி. கோவிந்தசாமி அவர்கள்
(சமாசத் தலைவர் – வர்த்தகர் சங்கம்)

சிறப்பு விருந்தினர்:- திரு. வெ. சிற்சபேசன்
(தலைவர் யாழ் வர்த்தகர் சங்கம்)

திரு. த. அன்னலிங்கம்
(செயலர் யாழ் வர்த்தகர் சங்கம்)

நன்றியுரை:- க. தியாகராசா
(பொருளாளர் நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்)

## தொடரும் கலை நிகழ்ச்சிகள்

★ நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சி

-பரிசுக்குலுக்கல்-

இவர்களுடன் இணைந்து

கௌரவ பாடகர்கள் :- ‘மாவீரர் புகழ் பாடுவோம்’

புகழ் ஜெயா சுகுமார்

## -பரிசுக்குலுக்கல்-

★ கலைபண்பாட்டுக் கழகத்தினரின்

**"சந்தனக்காடு"** நாடகம்

★ தமிழீழத்தின் பிரபல்யமான

**"இராஜன்ஸ்"** [ரமணன்] இசைக்குழுவினரின்

இன்னிசை விருந்து

கௌரவ பாடகர்கள் :- 'மாவீரர் புகழ் பாடுவோம்'

புகழ் ஜெயா சுகுமார்

'அப்புகாமி' புகழ் வர்ணராமேஸ்வரன்

'ஞானசவுந்தரி' புகழ் செல்வி கயல்விழி

'விடியலைத் தேடும் பறவைகள்'

புகழ் S. கொலின்ஸ்

இன்னும் தலைசிறந்த பெண் பாடகர்கள் இவ் இசை நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மனோலைற் - கோப்பாய் கண்ணா சவுண்ஸ் - திருநெல்வேலி

### பிரவேசம் : இலவசம்

குறிப்பு :- பரிசுத் திட்ட குலுக்கலில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகள் மண்டபத்திலேயே தங்களுக்குரிய சிட்டைகளை காட்டி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**அனைவரையும் அன்புடன் வரவேற்கும்**

# மதுரா பட்டு மகால் ஸ்தாபனத்தார்

**75, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

---

வணிகர் கழக நடவடிக்கைகளில் பெரிதும் பங்காற்றிய
மதுரா பட்டுமகால், சோபனா ஆடை அகத்தினரின்
இவ்விழா குறித்து எங்கள் மனமார்ந்த
வாழ்த்துக்களை தெரிவித்துக்
கொள்கின்றோம்

## யாழ் வணிகர் கழகம்

(யாழ் வர்த்தகர் சங்கம்) மேல்மாடி நவீனசந்தை

(ஸி-9200)

சிந்தனைக்கு

நோய்வாய்ப்பட்டிருக்கையில் தான் நலமாக இருப்பதாக கூறுபவன் அழியும் பேராபத்தில் இருக்கிறான்.

- தோமஸ் புல்லர்

ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2035

தபால் பெட்டி எண் 05

## தளம்புகிறார் டி. பி.

தென் மாகாண சபை தேர்தல் தோல்வியின் பின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது கொள்கையை சற்று மாற்றியுள்ளார் போல் தெரிகின்றது. சில விடயங்களில் தேர்தல் ஆதாயத்திற்காக அவர் விட்டுக் கொடுக்கவோ அன்றி விட்டுக் கொடுத்துள்ளதுபோல் காட்டிக் கொள்ளவோ தயாராகி உள்ளார்.

இந்த வகையிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான தொண்டமான் தொடர்பான கொள்கையிலும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகள் விடயத்திலும் டி. பி. விஜேதுங்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளமையாகும்.

ஜனாதிபதி பதவி ஏற்றதும் டி. பி. விஜேதுங்கா தொண்டமானை ஓரங்கட்ட முற்பட்டார். மலையகத்தில் தனது அரசியல் தளத்தை பலமாக அமைக்க முற்பட்ட டி. பி. விஜேதுங்கா மலையகத்தில் தனிப்பெரும் தலைவராக இருந்த தொண்டமானை தனது நேரடி எதிரியாகக் கருதினார். தொண்டமானுக்கு எதிராக முன்வைக்கும் கொள்கை மலையகத்தில் சிங்கள தேசியத்திற்கு புத்துயிர் ஊட்டி தனது அரசியல் தளத்திற்கு வித்திடும் என அவர் கருதினார்.

இந்நிலையிலேயே தொண்டமானுக்கு எதிரான போக்கை டி. பி. கடைப்பிடித்தார். இதேவேளை தொண்டமானும் காரசாரமான அறிக்கைகள் விட்டு டி. பி.க்கு எதிராகச் செயற்படவும் தொடங்கினார். இவ்வாறாக இருவருக்கும் இடையில் எழுந்த கருத்து முரண்பாடு இ. தொ. கா வை ஐ. தே. க. பிளவுபடுத்தும் அளவிற்குச் சென்றது.

ஆனால், தென் மாகாண சபைத் தேர்தல் தோல்வி அடுத்து வரும் தேர்தல்களில் தொண்டமானின் உதவி ஐ. தே. கவிற்கு அவசியம் என்பதைப் புரியவைத்தது. இந்நிலையில்தான், டி. பி. விஜேதுங்கா தொண்டமானை சந்திக்கவும், தொண்டமானை ஓரளவு தயவு பண்ணிக் கதைக்கவும் வைத்தது.

அமைச்சர் தொண்டமானைப் பொறுத்த டி. பி யின் இவ் இறங்குமானது போதும் என்ற நிலையையே ஏற்படுத்தியது. ஏனெனில் அமைச்சர் தொண்டமானுக்கு எப்பொழுதும் மலையக மக்களின் பிரச்சினைகளை விட தனது கௌரவம் என்பதே முக்கிய குறியாக இருந்தது. இந்நிலையில், டி. பி. விஜேதுங்கா, அமைச்சர் தொண்டமானை கௌரவமாகப் பேசத் தொடங்கியவுடன் அவர் குளிர்ந்து போனார். மலையக மக்களின் பிரச்

## வாராந்தம் தபால்களை யாழ் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து தபால்களை வாராந்தம் யாழ். குடாநாட்டிற்குள் எடுத்து வரும் முயற்சிகளின் பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாக நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாராந்தம் யாழ். குடாநாட்டிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகத் தபால்கள் எடுத்துச் செல்லப்படுவதைப் போன்று அதே கப்பலில் திருகோணமலையிலிருந்து யாழ். குடாநாட்டிற்குத் தபால்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தற்போது கொழும்பு சென்றுள்ள வட பிராந்திய தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் மேற்கொண்டு வருவதாக அத்தகவல் மேலும் தெரிவிக்கின்றது.

கொழும்பில் சேகரிக்கப்படும் யாழ். குடாநாட்டுத் தபால் பொதிகள் திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இனிமேல் தனித்தனியாக அரசாங்க திணைக்களங்கள் மற்றும் வங்கிகளுக்கான தபால்கள் ஏற்கப்படமாட்டாது என்றும் தபால் திணைக்களம் ஊடாகவே இத்தபால்களை இனிமேல் அனுப்ப முடியும் எனவும் தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டிலிருந்து அனுப்பப்படும் தபால்களின் தொகையை மேலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் இது சாத்தியப்படும் என்றும் அப்போது தபால்கள் தேக்கம் இன்றி விநியோகிக்கவும், இங்கு உள்ள தபால்களை தாமதமின்றி அனுப்ப முடியும் எனவும் உயர் அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

(தி), (க)

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள்

## நிரந்தர நியமனம் குறித்து அமைச்சு சுற்று நிருபம்

(கொழும்பு)

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான சுற்று நிருபம் கல்வி அமைச்சினால் சகல பிரதேச கல்வி காரியாலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சென்ற வருடம் பட்டதாரி பயிலுநராக நியமனம் பெற்ற சுமார் ஆறாயிரம் மேற்படி ஆசிரியர்கள் நியமனம் பெற இருப்பதாகவும் இது தொடர்பாக சுற்று நிருபம் இதுவரை கிடைக்கப் பெறாத சகல பிரதேச கல்வி காரியாலயங்களும் உடனடியாக மாகாண கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சிறையிலிருந்தபோது கட்சியை உடைக்க முயற்சிகள் நடந்தது

### மலையக மக்கள் முன்னணித் தலைவர்

(கொழும்பு)

எம்மை கைதுசெய்து சிறையில் அடைத்ததற்கு ஓர் அரசியல் நோக்கம் இருந்துள்ளது என்பதை உணர்ந்து கொண்டுள்ளேன். மலையகத்தில் தோன்றியிருக்கின்ற ஒரு புதிய அரசியல் சக்தியை நிர்மூலமாக்க இதை ஓர் சந்தர்ப்பமாக பயன்படுத்த பலர் முனைந்தனர் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தெரிவித்தார். அண்மையில் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட இவர் மீது கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புக்கு உடந்தையாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் தொடர்ந்து பேசுகையில், இவை மட்டுமல்ல மலையக மக்கள் முன்னணியை தடைசெய்ய பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதன்பின் எமது அமைப்பின் பல உறுப்பினர்கள் கைதாகினர். இவ்வாறு 40க்கும் அதிகமானோர் கைதாகினர் காரணமின்றி இவர்கள் கைதாகி சித்திரவதை செய்யப்பட்டனர். காரணமில்லாமல் எவரையும் கைது செய்யவோ தடுத்து வைக்கவோ தனக்கு அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக ஒருவரை பழிவாங்க அரசுக்கு அதிகாரம் இடையாது.

இன்று மலையக இளைஞர்களும் நூற்றுக்கணக்கான அளவில் கைதாகி சிறைகளில் உள்ளனர். நான் எனது மூன்று வருட சிறை அனுபவத்தில் இதை நேரில் கண்டேன்.

நான் சிறையில் இருந்தபோது மலையக மக்கள் முன்னணியை அழித்துவிட உடைத்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை நான் அறிவேன். நான் சிறையிலுள் இருந்ததால் தொடர்புகள் இன்றி எமது முன்னணி ஒரு தேக்க நிலையை அடைந்தது. என்னை வெளியே விடுவதற்கு எவருக்கும் எந்த அரசியல் லாபமும் காரணமாக இருக்கலாம் அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை என்றார்.

## யுத்தநிறுத்த முயற்சிகள்

## பட்டதாரிகளை பதிவுசெய்ய அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பட்டதாரிகள் அனைவரும் இம் மாதம் இறுதிக்கு முன்னர் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சகலபகுதி பட்டதாரிகள் மார்ச் 31-ம் திகதிக்கு முன்னர் தம்மை பதிவு செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் வடக்கு - கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு விசேட சலுகையாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக திட்டமிடல் அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## ரயிலில் சென்ற யாழ்வாசி பாலத்தில் மோதி மரணம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கடந்த செவ்வாய் இரவு தபால் ரயிலில் வவுனியா சென்ற யாழ்வாசி ஒருவர் இடைவழியில் பாலம் ஒன்றுடன் தலை மோதுண்டதால் பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த தம்பிராஜா புஷ்பராஜா (40 வயது) என்பவரே பலியானவராவார். வெளிநாடு செல்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வந்து நீர்கொழும்பில் இவ்வளவு காலம் இவர் தங்கியிருந்தார்.

மாகோவிற்கு அப்பால் ஏழுமைல் தொலைவில் ரயில் சென்று கொண்டிருந்த வேளையில் பாலம் ஒன்றுடன் தலை மோதுண்டதால் இவர் வெளியே தூக்கி வீசப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானார். சடலத்தை அம்பலன்பொல பொலிசார் கைப்பற்றினர். மரணமானவரின் பிரயாணப் பொதி வவுனியா ரயில் நிலைய அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி அடகு நகைகள் மருதானையில் வைக்கப்படும்

### மக்கள் வங்கி ஏற்பாடு

(நமது நிருபர்)

வடபகுதி அடகு நகைகளை கொழும்பில் மீட்பதில் மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை போக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மருதானையில் உள்ள மக்கள் வங்கி கிளையில் அடகு நகைகளை மீட்கச் செல்லும் மக்கள் பலநாட்களாக அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்படுவதாக செய்தி வெளியானது தெரிந்ததே.

இது குறித்து அவரிடம் வினவியபோது மருதானைக்கிளையிலிருந்து நான்கு மைல் தொலைவிலேயே நகைகள் பாதுகாப்பு கருதி வைக்கப்பட்டிருப்பதால் அவற்றை உடனடியாக மக்களுக்கு மீளளிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு தலைமையகத்துடன் தான் தொடர்பு கொண்டிருப்பதுடன் தாமதத்தை தவிர்க்க நகைகளை மருதானையிலே பாதுகாப்பாக வைப்பதற்கான ஒழுங்குகளை செய்யுமாறு கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 04. 20 புதன் இரவு

08. 01 க்கு - அன்னை பூபதியின் 6 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடைபெற்ற எழுச்சி நாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு.

08. 30 க்கு - செய்திகள்

08. 40 க்கு - நாடகம் - "தியாகங்கள் தொடரும்"

1994. 04. 21 வியாழன் காலை

07. 02 க்கு - மாவீர வணக்கம்

07. 15 க்கு - விடுதலைக் கீதங்கள்

07. 45 க்கு - செய்திகள்

07. 50 க்கு - பத்திரிகைச் செய்திகள்

07. 55 க்கு - தாயகப் பாடல்

ஸ்ரீலங்கா கடற்படையினால்

எப்பொழுதும் மலையக மக்களின் பிரச்சினைகளை விட தனது கௌரவம் என்பதே முக்கிய குறியாக இருந்தது. இந்நிலையில், டி. பி. விஜேதுங்கா, அமைச்சர் தொண்டமானை கௌரவமாகப் பேசத் தொடங்கியவுடன் அவர் குளிர்ந்து போனார். மலையக மக்களின் பிரச்சினைகளையும் அவர்கள் துன்பங்களையும் மறந்து ஐ. தே. கவிற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகி விட்டார்.

இதேசமயம், இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமை அரசியல் முக்கியத்துவம் பெற்றதாக இருக்கலாம். ஆனால், இது அவரைப் பொறுத்து புதியதொரு விடயமல்ல, ஏற்கனவே பல தடவை அவர் இவ்வாறான அரசியல் குத்துக்கரணங்கள் அடித்துள்ளார். ஆனால், இ. தொ. கா. செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான செல்லச்சாமிக்குத்தான் இது ஒரு பேரிடியாகும். இது சிலவேளை செல்லச்சாமியை அரசியல் துறவறத்திற்கு அனுப்பி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், அவருக்கு அனுதாபத்தை வெளிப்படுத்துவதை தவிர வேறு வழியில்லை.

அமைச்சர் தொண்டமானை அரசியலில் ஓரங்கட்ட முனைந்தது போன்றே தான் ஜனாதிபதி பதவிவரை உயர்வடைய வழிதேடிக் கொடுத்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளையும்; அவரது குடும்பத்தினரையும் அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்க டி. பி. விஜேதுங்கா முனைந்தார். ஆனால், தேர்தல் தோல்வி என்பது பிரேமதாசாவின் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும், பிரேமதாசாவின் குடும்பத்தை புறந்தள்ளி வைக்கவில்லை என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியத்தையும் டி. பி. விஜேதுங்காவிற்கு ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், தொண்டமானைப் போன்று டி. பி யின் அழைப்பிற்காக ஹேமா பிரேமதாசா காத்துக் கிடக்கவில்லை என்றே கூறலாம். டி. பி. விஜேதுங்கா தம்மை ஓரங்கட்ட முற்பட்டதையும், தற்பொழுது தம்மை அரசியல் லாபம் கருதி பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதை அனுமதிப்பதற்கும் ஹேமா தயாராக இல்லை என்றே எண்ண வைக்கின்றது. ஆனால், அரசியலில் கொள்கைகள், இலட்சியங்கள் எல்லாம் இரவோடு இரவாக மாறிவிடக் கூடுமாகையால் ஹேமாவின் நிலைப்பாடு பற்றித் தற்போது எதிர்வு கூறுவதும் கடினமானதாகும்.

ஆனால், ஹேமா பிரேமதாசாவின் நிலைப்பாடு என்னவாக இருப்பினும், டி. பி. விஜேதுங்கா அடுத்த தேர்தலில் மிகவும் குறியாகவே உள்ளார். ஏனெனில், அது ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கான பதவியை மட்டுமல்ல, டி. பி. விஜேதுங்காவின் அரசியல் வாழ்வை தீர்மானிக்கக் கூடியதாகும். இத்தேர்தலில் டி. பி. தோல்வி கண்டால் அவரது அரசியல் எதிர்காலம் அஸ்தமித்து விட்டது என்பதை அடித்துக் கூறலாம்.

# யுத்தநிறுத்த முயற்சிகள் ருவாண்டாவில் தோல்வி

## இரு வாரங்களாக கடும் மோதல்

(கிகாலி)

ருவாண்டாவில் போர் நிறுத்தத்திற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. ருவாண்டாவில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசு கலைக்கப்பட்டால் மட்டுமே போர் நிறுத்தத்திற்கு இணங்க முடியுமென கிளர்ச்சிக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதேசமயம் தலைநகர் கிகாலியில் தொடர்ந்து இரண்டாவது வாரமாக பெரும்பான்மை ஹூடு இன அரச படைகளுக்கும் சிறுபான்மை டுட்சி இன கிளர்ச்சிக் குழுவிற்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்று வருகிறது. தலைநகரின் சில பகுதிகள் கிளர்ச்சிக் குழுவின் பிடியில் உள்ளன. கிளர்ச்சியாளர்கள் தூரப்பாயும் ஆட்லறி குண்டுகள் மூலம் இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக செய்திகள் வெளியிட்டு வந்த தனியார் வானொலி நிலையத்தையும் இவர்கள் நிர்மூலமாக்கியுள்ளனர்.

தலைநகரில் மூன்று இராணுவ நிலைகளிலும் சில கேந்திர இடங்களிலும் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருக்கின்றது. இதனிடையே ருவாண்டாவில் நிலை கொண்டிருக்கும் ஐ. நா. அமைதிப் படைகள் எடுத்த சமரச முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# சேர்பிய டாங்கிகள் தொடர்ந்து முஸ்லிம் நகர் மீது தாக்குதல்

(சரஜேவோவா)

பொஸ்னியாவில் முஸ்லீம்கள் அதிகமாக வாழும் கொராஜ்ர நகர் மீது தொடர்ந்து சேர்பிய டாங்கிகள் குண்டு மாரி பொழிந்து வருகின்றன. இதனால் இந்நகரில்பீதி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நகர் அமைதி வலயமாக ஐ. நா வால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. பிரதிநிதிகளுக்கும் சேர்பியத் தலைவர்களுக்கும் இடையில் தாக்குதல் நிறுத்தம் குறித்த பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன. சேர்பிய டாங்கிகள் நகரிற்கு அண்மையில் நிலைகொண்டிருக்கின்றன. சேர்பிய டாங்கிகள் மீது தாக்குதல் நடத்தச் சென்ற நேட்டோ விமான அணியில் விமானம் ஒன்று சேர்பியரால் சுட்டுவீழ்த்தப்பட்டதையடுத்து சேர்பியரின் தாக்குதலை எவ்வாறு நிறுத்துவது என்பது குறித்து ஐ. நா பிரதிநிதிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இதே சமயம் சேர்பியரின் தாக்குதலை நிறுத்த வற்புறுத்தும் வகையில் ரஷ்யாவை ஐ. நா பிரதிநிதிகள் நாடியுள்ளனர். முற்றுகை விடப்பட்ட நகரில் 60 ஆயிரம் மக்கள் சிக்கியுள்ளனர் எனவும் 48 ஆயிரம் மெற்றிக் தொன் அளவு கோதுமை மா மட்டுமே கையிருப்பில் இருப்பதாகவும் இப்பகுதியில் உள்ள யூ. என் எச். சி. ஆர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நம் நாடு உயர்வாகும்
நாடெல்லாம் பயிர் செய்தால்

செய்யுமாறு கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா கடற்படையினால்

# 24 தமிழக மீனவர்கள் 3 ஆண்டுகளில் கொலை

(டில்லி)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து இந்திய அரசு சிறிலங்கா அரசிடம் வலுவாக ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இவ்வாறு இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல் பாட்டியா பாராளுமன்றத்தில் எழுத்து மூலமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்தப் பிரச்சினை குறித்து கொழும்பு அரசுடன் பல்வேறு நிலைகளிலும் பேச்சு நடத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் இம் மாதிரியான சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் செயற்பட இரு தரப்பும் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தமிழக மீனவர்கள் 24 பேர் சிறிலங்கா கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், குறிப்பிட்டார்.

# வெளிநடப்பு செய்யாத 3 காங்கிரஸ் உறுப்பினர்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்த போது அக்கட்சியின் மூன்று உறுப்பினர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை.

பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம், சட்டப்பேரவை உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் விலக்கி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பான பிரச்சினையை எழுப்பினார். அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை மிக உயர்வானது என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டு தண்டனையைக் குறைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆனால் சட்டப் பேரவைத் தலைவர் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார் இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியினர் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியபடி வெளிநடப்புச் செய்தனர்.

எனினும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செல்வராஜ், அப்பு நடேசன், திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோர் அவர்களைத் தொடர்ந்து செல்லாமல் சபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர்.

## மத்திய அமைச்சர் எச்சரிக்கை

மத்திய அரசுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கவேண்டாம் என்று மத்திய அமைச்சர் வி. சி. சுக்லா சென்னையில் வைத்து தமிழக அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் நாட்டில் ஆளும் அ. இ. அ. தி. மு. க. பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளாது விட்டால் காங்கிரஸ் கட்சியுடன் உறவு ஏற்படும் வாய்ப்பே இல்லை என்றும் தெரிவித்தார்.

யாழ். தமிழ்த்தாய் புத்தகசாலை

அன்பு நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்களை
உங்களுக்குத்
தெரிவித்துக்கொள்வதுடன்

தனது
புதிய நூல் தொகுதியையும்
விற்பனைக்கு
விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில்
பழைய பஸ் நிலையம் அருகில்
191, மின்சார நிலைய வீதியில்
உங்களுக்காக

தமிழ்த்தாய் புத்தகசாலை

(இ-9205)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

செஞ்சிலுவைச் சங்கத்தினை
உருவாக்கிய

ஜீன் ஹென்றி டுனால்ட்

அவர்களின் தினத்தை

**08. 05. 1994 - ல்**

அங்கவீனர்களின் எழுச்சி நாளாக யாழ் கிளை தலைமையகத்தில் கீழ்வரும் நிகழ்ச்சிகள் நடாத்தப்படும்:

1. கால் வழங்காதவர்களுக்கான முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி: (முச்சக்கர வண்டிகளைத் தாங்களே கொண்டு வருதல் வேண்டும்) நேரம் மு. ப. 7 மணி
2. வாய் பேச முடியாதவர்களுக்கான படம் வரைதல் போட்டி: (உபகரணங்களைத் தாங்களே கொண்டு வருதல் வேண்டும்.) நேரம் மு. ப. 10 மணி
3. விழிப்புணர்வற்றோர்களுக்கான கவிதை புனைதல் போட்டி: நேரம் மு. ப. 10 மணி

பிற்பகல் 3 மணிக்கு பரிசு வழங்கல் நடைபெறும்

இவற்றில் பங்குபற்ற விரும்புவோர் இன்னக்கு 03. 05. 1994 க்கு முன்பாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

அன்றைய தினம் இரத்ததானம் செய்ய விரும்பும் தொண்டர்களும், உறுப்பினர்களும் பிரிவுகள் மூலமாக யாழ். போதனா வைத்தியசாலை அல்லது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் இரத்ததானம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

73, கண்டிவீதி, செஞ்சிலுவைச் சங்க சேவையில்
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்.
19. 04. 1994 (இ 9204)

செப்டிசீமியா சிகிச்சை களங்களை

# தொற்று நீக்கம் செய்ய பரீட்சார்த்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் செப்டிசீமியா நிலையிலுள்ள நோயாளர் தங்கும் சிகிச்சைக் களத்தைத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக சிறுவர் பிரிவிலுள்ள மேற்படி சிகிச்சைக் களத்தை ஓரிரு தினங்கள் மூடி அங்கு தொற்று நீக்கி தெளித்து பின்னர் மீண்டும் அதனைத் திறப்பதற்கு வைத்தியசாலை வட்டாரங்கள் தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

மேற்படி நோய்க்கு சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மிகவிரைவில் தொற்று நோய்கள் ஏற்படலாம் என்பதனாலேயே இவ்வாறு சிகிச்சைக் களங்களைத் தொற்று நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரியவருகிறது.

பரீட்சார்த்த முயற்சியாக சிறுவர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந் நடவடிக்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என தெரியவருகிறது.

இதனிடையே இச் சிகிச்சைக் களங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் இக்காலங்களில் போதனா வைத்தியசாலையின் வேறோர் இடத்தில் வைத்து செப்டிசீமியாவிற்கான சிகிச்சை மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது. (நி)

# மே. இந்திய கிரிக்கட் வீரர் லாரா உலக சாதனை

## 375 ஓட்டங்களைக் குவித்தார்

(சார்ஜா)

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் அணியின் இளம் நட்சத்திரமான பிரையின் லாரா புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் அதிகமான ஓட்டங்களைப் பெற்ற தனிநபர் என்ற சாதனையை அவர் நிலைநாட்டியிருக்கிறார். இவர் 375 ஓட்டங்களைப் பெற்றார். 1958 ஆம் ஆண்டில் ஹரிசோபஷின் 365 ஓட்டங்களைப் பெற்று நிலைநாட்டியிருந்த சாதனையை பிரையின் லாரா இப்போது முறியடித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது இறுதிடெஸ்ட்டின் போது 24 வயதுடைய இடதுகை ஆட்டக்காரனான லாரா இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார். இவர் 375 வது ஓட்டத்தை எடுத்தபோது ஆன்ட்ரி வீசிய பந்தை தடுத்து ஆடியபோது விக்கட் கீப்பர் கைச் பிடிக்க ஆட்டம் இழந்தார். மொத்தமாக 12மணித்தியாலங்களும் 46 நிமிடங்களும் அவர் ஆடுகளத்தில் இருந்ததும், டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் மூன்று சதம் அடித்த 13வதுநபர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் குவித்த ஓட்டங்களில் 45 பௌண்ட்ரிகளும் இரண்டு சிக்சர்களும் அடங்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு மாவட்டத்தில் படை முகாம்கள் சீரமைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல சிறிலங்கா இராணுவ, பொலிஸ் முகாம்கள் இடம் மாற்றப்பட்டும் மறுசீரமைக்கப்பட்டும் உள்ளன.

சின்னவத்தை, செட்டிப்பாளையம், மண்டூர், 13ஆம் கிராமம், வெல்லாவெளி ஆகிய இடங்களில் முகாமிட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் பழுகாமம், 4 ஆம் வத்தடி, கொக்கட்டிச்சோலை தும்பங்கேணி ஆகிய இடங்களுக்குச் சென்று புதிய முகாம்களை அமைத்துள்ளனர்.

மேலும் தாந்தாவெளிமடு, என்ற இடத்தில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் தாந்தாமலை என்ற இடத்துக்குச் சென்று புதிய முகாம் அமைத்துள்ளனர்.

அத்துடன் 13 ஆம் கொலனி வெல்லாவெளி, செட்டிபாளையம் ஆகிய இடங்களில் பொலிசார் புதிய முகாம்

# ஜெயலலிதா மத்திய அரசு மீது சுமத்துவது ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு குலைவு என்கிறார் சவான்

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தத் தவறிவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறிவருகிறார் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மாநிலங்கள் அவையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற நெடுஞ்சாலைக் கொள்ளைகளுக்குப் பின்னணியில் மத்திய அரசின் ஆட்கள் இருக்கிறார்கள் என்று பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளை செல்வி ஜெயலலிதா கூறினார் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஜெயந்தி நடராஜன் மாநிலங்கள் அவையில் பேசுகையில் அங்கிருந்த அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டபோது சவான் குறுக்கிட்டு இதனைத் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைக் கொள்ளைகள் அஞ்சத்தக்க வகையில் பெருகிவிட்டதென உள்துறை அமைச்சர் அறிக்கை விட வேண்டும் என்றும் கோரப்பட்டது-

தமிழ்நாடு முதலமைச்சர் சட்டப்பேரவையில் கூறிய இக்கூற்று சமீபத்தில் தான் தமிழ்நாட்டிற்குச் சென்றபோது தனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்று உள்துறை அமைச்சர் கூறினார்-

## இலங்கையில்

குறிக்கிட்ட சுதந்திர கட்சி எம். பி. லக்ஸ்மன் ஜெயக்கொடி ஒழுங்குப் பிரச்சனை ஒன்றைக் கிளப்பினார். ஒன்பது மாகாணங்கள் இலங்கையில் இருக்கின்ற போதும் இந்த மசோதாவில் எட்டு மாகாணங்கள் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது. இது எமது அரசியலமைப்பிற்கு முரணானது இத் தீர்மானத்தை சபையில் நிறைவேற்ற முயல்வதன் மூலம் அவசரகால சட்டத்தின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பை நிரந்தரமாக ஏற்றுக் கொண்டது போலாகி விடும் எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களை தனித் தனியாக பிரித்துக் குறிப்பிட அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் வடக்கு, கிழக்கு இணைப்பிற்கும் இந்த மசோதாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை எனத் தெரிவித்தார்.

எனினும் அமைச்சரின் கூற்றை ஏற்க எதிர்க் கட்சியினர் மறுத்ததை தொடர்ந்து ஆளும் கட்சியைச் சேர்ந்த பல அமைச்சர்களும் விவாதத்தில் பங்கு கொண்டனர்.

எதிர்க்கட்சி தரப்பில் இருந்தும் பல எதிர்ப்பு குரல்கள் கிளம்பின.

இந்த நிலையில் இவ் விடயத்தில் தாம் துணிந்து தீர்மானம் எடுக்க முடியாது எனக் குறிப்பிட்டு உப சபாநாயகர் பாராளுமன்றத்தை பத்து நிமிடங்கள் ஒத்திவைத்து பாராளுமன்ற செயலாளருடன் ஆலோசனை கலக்கப் போவதாகத் தெரிவித்தார்.

ஒன்றரை மணிநேர ஒத்திவைப் பின் தாமதத்தின் பின்னர் சபை கூடிய போது இம் மசோதாவில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றாகக் குறிப்பிடுவதன் மூலம் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு நிரந்தர சட்டவடிவம் கொடுப்பதாக மாட்டாது எனவும் 1987இல் ஜனாதிபதி எடுத்ததீர்மானத்திற்கு அமையவே வடக்கு கிழக்கு இணைப்பு ஏற்பட்டதெனவும் இது பற்றிய இறுதி முடிவுக்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவது பற்றி அவ்வமைப்பில் குறிப்பிட்டிருக்கிறதெனவும் தெரிவித்தார்.

சட்டமூலம் பற்றிய விவாதம் பின்னர் தொடர்ந்து நடைபெற்றது.

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

தொண்டமனாறு வெளிக்கள நிலைய இளம் மன்றத்தினரால் இன்று வடமராட்சியில் நடாத்தப்படவிருந்த பௌதிகவியல் கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது என்று மேற்படி மன்றத்தின் காப்பாளர் தெரிவித்தார்.

## பரீட்சை

கணக்கு பதிவாளர்களின் பதவி உயர்வுக்கான பரீட்சை அடுத்த மாதம் ஏழாம் திகதி கொழும்பில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த இப்பரீட்சை எதிர்வரும் ஏழாம் திகதிக்கு பிற்போடப்பட்டிருப்பதாகவும் இது கொழும்பில் மட்டுமே நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் ...

காணப்படடதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவருடன் சென்ற மற்றிரு மீனவர்கள் உயிர்தப்பி வந்தது அறிந்ததே. (21)

ஜை. கோ.

அமைச்சர்கள் இருவர் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டம் நடந்து கொண்டிரு...

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபை வள்ளியம்மை

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கனகசபை வள்ளியம்மை 19. 04. 94இல் காலமானார். அன்னார் காலம் சென்ற கார்த்திப்பிள்ளை கனகசபை (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) யின் அன்பு மனைவியும், காலம் சென்ற ஞானச்சந்திரன் (முன்னாள் அரச அதிபர் முல்லைத்தீவு), பாலச்சந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர் டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி), திருமதி யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), திருமதி புவனேஸ்வரி நாகராஜா, காலம் சென்ற மனோச்சந்திரா (லண்டன்), பூரணச்சந்திரன் (பிராந்திய இயக்குநர் புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம் சென்ற பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் மின்சாரசபை), கலாநிதி நாகராஜா விவசாய ஆராய்ச்சியாளர் கண்டி), சரோஜினி

19. 04. 1994 கௌரவ செயலாளர்.

(இ 9204)

## தென்னை பெருந்தோட்டச் செய்கை மேம்பாட்டுப் பணிகளின் மேற்பார்வையாளர்கள் தேவை

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தென்னந் தோட்டங்களின் மேம்பாட்டுப் பணிகளில் ஆர்வத்துடன் செயல்படக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

ஆகக்குறைந்த கல்வித் தகைமை-

க. பொ. த. சாதாரண தகைமைத் தேர்வில் அல்லது தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் தேர்ச்சியடைந்திருப்பதுடன் குறிப்பாக தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்;

அகவை-

20ஆண்டிற்கு மேற்பட்டவர்களாகவும், 40ஆண்டிற்கு உட்பட்டவர்களாகவும் இருப்பது விரும்பத்தக்கது.

மேற்படி பணி தொடர்பான பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஊதியம் திறமைக்கும், தகைமைக்கும் ஏற்ப முடிவுசெய்யப்படும்;

**விண்ணப்ப முடிவு நாள்- 25. 04. 1994**

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

பொறுப்பாளர்,
பெருந்தோட்டம், நிதித்துறை,
புலோப்பளை, பளை.

(இ-9203)

## பிற்போடப்பட்டுள்ளது

வறிய மாணவரின் கல்வி மேம்பாட்டிற்காக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் நடாத்தப்பட இருந்த போராளிக் கலைஞர்களின் இன்னிசைப்பாடல்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது;

(இ 9206) வி. பு. மா. அமைப்பு.

...இடங்களில் முகாமிட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் பழுகாமம், 4ஆம் கிராமம், போரைதீவு; அம்பிலாந்துடன் 13ஆம் கொலனி வெல்லாவெளி, செட்டிபாளையம் ஆகிய இடங்களில் பொலிசார் புதிய முகாம்களை அமைத்துள்ளனர்.

## கூரேயை நாடு திரும்புமாறு டி. பி. அவசர அழைப்பு

(கொழும்பு)

வெளி நாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயை உடனடியாக நாடு திரும்புமாறு நேற்று முன்தினம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அவசர அழைப்பு விடுத்துள்ளார்;

நேற்று முன் தினம் காலையில் மேற்படி அழைப்பு விடுக்கப்பெற்ற போதும் நேற்று மாலை வரை கூரே சிறிலங்காவிற்கு திரும்பவில்லையென்று தெரிய வருகின்றது.

காமினி திசாநாயக்காவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்காக தேசிய பட்டியல் உறுப்பினர் அலெக் றொபட்சன் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய முன் வந்ததை தொடர்ந்து இவ்வாறு கூரேக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டதாக அரசாங்க கட்சி உயர் அதிகாரிகளின் வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

இவ்வாறு பதவியை இராஜினாமா செய்யும் அலெக் றொபட்சன் இடத்திற்கு காமினி திசாநாயக்காவை நியமனம் செய்வது ஜனாதிபதிக்கு அவசர தேவையாக உள்ளது எனவும் இவ் இடத்திற்கு வேறு ஒருவரை நியமிப்பதற்கு கட்சி பொதுச் செயலாளரே பாராளுமன்ற செயலாளருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் இதற்காகவே கூரேயின் வருகை அவசியமானதாக அமைவதாக தெரிவிக்கப்படுகின்றது;

சிறிசேன கூரே இல்லாத நிலையில் காமினி திசாநாயக்கா நியமிக்கப்பட்டால் அது தற்போது ஐ. தே. க. வில் இருக்கும் பிளவை மேலும் விரிவடையச் செய்யும் என்றும் எனவே அதனை தவிர்க்கும் முகமாகவே இவ்வாறு கூரே அழைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன;

### சிறப்பு

...நியமாணவர்கள்தத்தமது பகுதி மாணவர் அமைப்பு பொறுப்பாளர்களிடம் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது;

இறுதியாக கூடுதலான பரிசில்களைப் பெற்ற யாழ் இந்துக் கல்லூரி சார்பில் அதிபர் திரு. பஞ்சலிங்கம் தேசிய ரீதியில் பரிசு பெற்ற மாணவர்களின் பெற்றோர் சார்பில் திருமதி கோகிலா மகேந்திரன், மற்றும் தேசிய ரீதியில் பரிசு பெற்ற மாணவர் சார்பில் கிளிநொச்சி கோட்டத்தைச்சேர்ந்த மகாலிங்கம் சண்முகன் ஆகியோர்உரை நிகழ்த்தினர். நன்றியுரையை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. இதயன் நிகழ்த்தினார்.

(ச), (பா)

### கோகுலனுக்கு

மேம்பாட்டுப் பேரவை தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் ஜோசேப் அடிகளார், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் மற்றும் சிறப்பு பரிசில் பெற்ற மாணவனின் தாயார் ஆகியோர் உரை நிகழ்த்தினர்;

(ச)

...ஐ. தே. அமைச்சர்கள் இருவர் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டம் நடந்து கொண்டிருந்தது எனவும், இந்தப் பகுதியிலுள்ள காவல் துறையினர் அனைவரும் கூட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்தமையால் ஏழுமலையைக் காப்பாற்ற யாரும் இருக்கவில்லை எனவும் கூறப்படுகிறது;

இந்தப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது இந்தப்பகுதியில் ஒரு கூட்டத்தில் உரையாற்ற இருந்த மு. கருணாநிதி தமது நிகழ்ச்சியை ரத்துச் செய்துள்ளார் தி-மு-கவின் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரான மதிவாணன் உட்பட ஐந்துபேர் காவல் துறையினரால் இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### உல்லாசப் பயணிகள்

...லிருந்து தமது பெயரை நீக்கவிருப்பதாக கூறினர்,

இதேவேளை1200மில்லியன் டாலர் வருமானத்தை ஈட்டித்தரும் இத்துறையில் ஏற்படுக்கும் பாதிப்பு தொடருமோ என்ற ஐயம் இருக்கின்ற போதும் அரசாங்கம் இது குறித்து எதையும் இன்னும் அறிவிக்கவில்லை;

### உல்லாசப்

...அழைத்துக்கொள்ளும் அபாயானம் காணப்படாத குழுவின் எச்சரிக்கை குறித்து அறிவுறுத்த வேண்டியது தமது கடமை எனவும் தெரிவித்துள்ளனர்;

இதேவேளை எல்லாளன் படையினர் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும், அந்நிய முதலீட்டாளர்களுக்கும் விடுத்திருக்கும் அச்சுறுத்தலுக்கு எதிராகப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் கொழும்பில் மேற்கொள்ளப்படுகிறது வெளிநாட்டுப் பயணிகளுக்குப் பாதுகாப்புத் தரப்படும் என சிறிலங்கா உயர் ஸ்தானிகர் சிறில் ரணதுங்க லண்டனில் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்;

...பூரணசந்திரன் (பிராந்திய இயக்குநர் புறோமோர் டோர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலம் சென்ற பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் மின்சாரசபை), சுவாநிதி நாகராஜா (விவசாய ஆராய்ச்சியாளர் கண்டி), சரோஜினிதேவி (மனோ), சுமங்களாதேவி (சாரதா), மனோகராதேவி, சோதிலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இலக்கம் 49, விதானையார் வீதி, சண்டிக்குளி இல்லத்தில் இன்று (20. 04. 94) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்

க. பாலச்சந்திரன் (மகன்)

க. பூரணச்சந்திரன் (மகன்)

49, விதானையார் வீதி,
சண்டிக்குளி.

(8099)

## நாகலிங்கம் சிவபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற ஓவசியர் T.O பட்டினசபை, சுன்னாகம்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும்கொண்ட நாகலிங்கம் சிவபாலசிங்கம் காலமாகிவிட்டார்; இவர் காலஞ்சென்ற நாகலிங்கம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் சியாமளா, சிவகுமார் (கனடா); சர்மிளா (நோர்வே), சசிக்குமார் (பொறியியல் பீடம் மொறட்டுவ பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயக்குமார், தர்சினி (கனடா) அரவிந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா; வெங்கடேஸ், லக்சிகா (கனடா), சரவணா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் சிவராஜா, விமலர், இரத்தினம், இராசமணி, காலம் சென்ற சிவானந்தம், அன்னம் ஆகியோரின் சகோதரனும் தம்பிராஜா, சச்சிதானந்தன், நித்தியானந்தன், விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்;

இறுதிக் கிரியைகள் இன்று 20- 4- 1994 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்;

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்;

தகவல்;
சி. சசிக்குமார்
(மகன்)

(8094)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.